2012 மே 3]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கடைகளுக்கு மேலே ஒரு தாய்க் கடையிலிருந்து பிரிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று இங்கே வினா எழுப்பியிருக்கிறார்கள். இரண்டு கடைகளுக்கு மேலே கடைகளைப் பிரிப்பதற்கு விதிகளில் இடம் இல்லை என்று சொன்னாலும், குடும்ப அட்டைகள் அதிகமாக இருக்கின்றன, மக்கள் அதிக தூரம் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது என்கிற கருத்தினை இங்கே சொன்னார்கள். அப்படியிருக்கிற நேரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்புக்கூறுகளின் அடிப்படையில், அதைப் பகுதிநேர அங்காடியாகவோ அல்லது அதற்குரிய குடும்ப அட்டைகள் இருந்தால் அதை முழுநேர அங்காடியாகவோ பிரித்துத் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

200—

தொழிற்பேட்டை

***6046—திரு. கோவி. சம்பத்குமார்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில், சிட்கோவின் 7.08 ஏக்கர் நிலம், தோல் மேம்பாட்டு சேவை தொழிற்

கூட்டுறவுச் சங்கம்மூலம் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்குப் பெறப்பட்டு, 25–11–2011 அன்று பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பத்திரப் பதிவு அலுவலர்களால் நிலம் மற்றும் கட்டடம், 25–4–2012 அன்று ஆய்வு செய்யப்பட்டது. அசல் பத்திரம், பதிவுத் துறை அலுவலகத்திலிருந்து பெறப்படவுள்ளது. மேலும், நிலத்தின் வரைபடம், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களுக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையில், ரூ.58 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ள, கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தொழிற்பேட்டை அமைக்கும் பணி, சிட்கோ மூலமாக விரைவாக நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தைத் தலைசிறந்த முதன்மை மாநிலமாக உருவாக்கிட, நாளும் ஒரு திட்டம் தந்து, நல்லாட்சி நடத்திவரும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, பணிவோடு வணங்குகிறேன். எனது வாணியம்பாடி தொகுதியில் ஏராளமான தோல் தொழிற்சாலைகள் இருந்தன. கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு, மாசுக் கட்டுப்பாடு, கழிவுநீர் சுத்திகரிப்பு என்று காரணத்தைக் காட்டி, தோல் தொழிற்சாலைகளை மூடிவிட்டது. இதில் பணிபுரிந்த பணியாளர்கள் வேறு தொழில் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். எனவே, வாணியம்பாடி தொகுதியில் தொழிற்பேட்டையை உடனடியாக அமைத்துத் தந்து, அந்தப் பகுதியிலே தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றி வந்த பணியாளர்களுக்கு வேலை வழங்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலையை அமைப்பதற்கு

2012 மே 3]

சிட்கோ தொழில் நிறுவனத்தின் மூலமாக விரைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவுப்படி பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன; விரைந்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. சம்பத்குமார் அவர்கள்.

திரு. கோவி. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடி தொகுதியில் சிட்கோ மூலமாக உடனடியாகத் தொழிற்பேட்டை அமைத்துத் தர ஆவன செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதிக்குட்பட்ட கம்பைநல்லூர் பகுதி, தென்பெண்ணையாற்றுப் படுகையில் இருக்கக்கூடிய கெலவள்ளி, ஈச்சம்பாடி, பாரூர், அரசம்பட்டு இப்படிப்பட்ட இடங்களில் பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் இருக்கின்றன. அங்கே தென்னை நார் மூலமாக Coir Industry அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை நாரைக் கொண்டு, Coir Cluster Industries அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார்கள். அதற்காக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்சமயம் Coir Cluster Industries அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக்கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

[2012 மே 3

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி வளர்ந்துவரும் தொழில் நகரமாக இருந்து கொண்டிருக்கின்றது. ஆகையால், அங்கே தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் புதிய தொழிற்பேட்டைகளை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரசேகர் அவர்கள் கோரிக்கையையும் சேர்த்துப் பேசி விடுங்கள்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலையில் புதிய தொழிற்பேட்டையும், திரு. சந்திரசேகர் விருப்பத்திற்கேற்ப மணப்பாறையிலும் புதிய தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்பேட்டை ஆரம்பிப்பதற்கு புறம்போக்கு நிலங்கள் அடையாளம் கண்டெடுக்கப்பட்டால், போதுமான நிதி ஆதாரத்துடன், தொழில் திட்டங்களுடன், 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், உடனடியாக சிட்கோ மூலமாக அங்கு தொழிற்பேட்டை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, துணைக் கேள்விக்கு அனுமதி கேட்டுவிட்டு அங்கு என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் துறையில் பின்தங்கிய சட்டமன்றத் தொகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசினுடைய

2012 மே 3]

பரிசீலனையில் உள்ளதா? வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டிருக்கக்கூடிய ஆனைமலை ஒன்றியத்தில் தென்னை மட்டையிலிருந்து நார், கயிறு மற்றும் இருக்கக்கூடிய பல்வேறு தொழில்களை உருவாக்க முடியும். அப்படிப்பட்ட திட்டம் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 94 சிட்கோ தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. மேலும், பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அந்தப் பகுதியில் தொழில் முனைவோர்கள், போதிய நிதி ஆதாரத்துடன், தொழில் தொடங்குவதற்கான திட்டங்களுடன் முன்வந்தால், அதற்கான ஆலோசனைகளைப் பெற்று, தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தேவையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் ஆகியோர்களைக் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் சிட்கோமூலமாகத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வழித்துணையான்குப்பம் என அழைக்கப்படுகிற எனது கீழ்வைத்திணான்குப்பம் தொகுதியில் முழுக்க முழுக்க ஊராட்சிகளே நிறைந்திருக்கின்றன. பேரூராட்சியோ, நகராட்சியோ கிடையாது. 350–க்கும் மேற்பட்ட குக்கிராமங்கள் இருக்கின்றன. ஆந்திரா, கர்நாடகா எல்லையோரத்திலே அமைந்திருக்கிற இந்தத் தொகுதியிலே வேலூருக்கு மிக அருகிலே இருக்கிற இந்தத் தொகுதியிலே, பாரம்பரியமிக்க காட்பாடி தொடர்வண்டிச் சந்திப்பு இருக்கிற இந்தத் தொகுதியிலே, நெசவுத் தொழில், பீடித் தொழில், தோல் பதனிடும் தொழில், ஊதுவத்தி தயாரிக்கிற தொழில் ஆகியவை எல்லாம் குடிசைத் தொழில்களாக இருந்து

கொண்டிருக்கின்றன. இந்தத் தொகுதியிலே ஒரு தொழிற்பேட்டை தொடங்குவதற்கு அரசு முன்வருமா? அரசு, தொழிற்பேட்டை தொடங்குவதற்கு எத்தகைய அலகுகளை, கூறுகளை மரபாக வைத்திருக்கிறது? அதன் அடிப்படையிலே தொடங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்பேட்டை சிட்கோ நிறுவனத்தின்மூலமாகத் தொடங்கப்பட வேண்டுமென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக அங்கு அடையாளம் காணப்பட்ட புறம்போக்கு நிலங்கள் இருக்க வேண்டும். கிட்டத்தட்ட 20 தொழில் முனைவோர்கள் தகுந்த நிதி ஆதாரத்துடன், தொழில் திட்டங்களுடன் முன்வர வேண்டும். அப்படி முன்வரும்பட்சத்தில், வேலூர் மாவட்ட ஆட்சியர், பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், வேலூர் ஆகியோர்களுடன் கலந்தாலோசித்து, புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையின் கீழ் உள்ள சிட்கோ மூலமாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியில் சிட்கோ நிறுவனம் மிகப் பெரிய பங்காற்றுகிறது. இந்த சிட்கோ தொழிற்பேட்டைகளில் தொழில் தொடங்க முன்வருவோருக்கு அரசு கொடுக்கக்கூடிய சலுகைகள் என்னென்ன? பன்னாட்டுக் குழுமங்களுக்குக் கொடுக்கக்கூடிய பதினைந்து ஆண்டுக் கால தொழில் வரிச் சலுகை போன்றவையும் இந்தச் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். நீங்கள் மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்விகளைக் கேட்கிறீர்கள். Multi–National Companies குறித்து தனிக் கேள்வி போடவும். தொழிற்பேட்டை*

ஆரம்பிப்பது குறித்த கேள்விக்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) இல்லை, That is a separate matter, please. மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: பின்தங்கிய மாவட்டம் என்றால் முன்னுரிமையில் எடுத்துக்கொள்ளப்படும். அவருடைய மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருந்தால், முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொண்டு, குறைந்தபட்சம் 20 தொழில் முனைவோர் தகுந்த நிதி ஆதாரத்தோடு, தொழில் தொடங்குவதற்குண்டான தகுந்த திட்டங்களோடு முன் வரவேண்டும். அவ்வாறு முன்வரும்பட்சத்தில், சிட்கோ நிறுவனம் மூலமாகத் தொழில் தொடங்குவதற்குண்டான, தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கையை அம்மா அவர்கள் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, Please sit down.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: சலுகைகள் என்ன என்பதுதான் கேள்வி, அரசினுடைய தொழிற்பேட்டையில் தொழில் முனைவோர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால், பதில் பெற்றுச் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் மாவட்டம், பின்தங்கிய மாவட்டமாக இருந்து அங்கு Industrial Estate, form செய்ய வேண்டுமென்றால், குறைந்தது 20 Entrepreneurs–ஐ அதாவது 20 தொழில் முனைவோர்களை அழைத்து வாருங்கள். Industrial Estate, form செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் தாலுகா, ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்திலே

தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்காக 126 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டு, 56 ஏக்கரிலே வேலை நடைபெற்று வருகிறது. மீதியிடம், தகவல் தொழில்நுட்பத்திற்கு வேண்டாம் என்று சொல்லிவிட்டதாக Small Scale Industries அலுவலர்கள் என்னிடம் சொன்னார்கள். மீதி உள்ள 70 ஏக்கரில் தொழிற்பேட்டை அமைக்க, அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கு, சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்து, சிட்கோ நிறுவனத்தின்மூலமாக அது ஏற்புடைய இடமாக இருக்கும்பட்சத்தில், சேலம் மாவட்டத்தில் தொழில் முனைவோர் முன்வரும்பட்சத்தில், அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. ஜானகிராமன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

201—

தடுப்புச் சுவர்

***4786—திரு. ஐ. ஜானகிராமன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, சின்னமுதலியார் சாவடி, நடுக்குப்பம் ஆகிய கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வானூர் தொகுதி, சின்னமுதலியார் சாவடி, நடுக்குப்பம் ஆகிய கடற்கரையோரப் பகுதிகளில், கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். எள் என்று சொல்வதற்கு முன்னர்,